ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/46 - 2017 දෙසැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2017.12.08

2048/46 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ச. வ. பி. 21/78 (xvi)**

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2017, திசெம்பர் 06.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம், 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2017.12.06 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டம், (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ (1) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்டதும், 2017 ஆம் ஆண்டின் 2031/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. நிறுவகமானது, (இதனகத்துப் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

4. சட்டம் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகள் மற்றும் (இதனகத்துப்பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைய, நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மாணவர்களைச் சேர்த்தலும்;

(ஆ) நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் விதப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் படக்கூடியவாறான ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறைகளில் பட்டப்பின் போதனைகள், பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை ஏற்பாடு செய்தலும்;

(இ) ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகள் போன்ற பல்வேறு விசேடித்த துறைகளில் அல்லது இயைபான விசேடித்த துறைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் மற்றும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் தீர்மானித்தலும்;

(ஈ) ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகள் போன்ற பல்வேறு விசேடித்த துறைகளில் அல்லது இயைபான விசேடித்த துறைகளில் திறமை பெற்ற ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பட்டப்பின் பரீட்சைகளை நடாத்துதலும், பரீட்சைகளில் சித்தியடைந்த மற்றும் பல்கலைக்கழகமானது நிறுவகத்துடனான கலந்தாலோசனையுடன் துணைவிதிகளால் விதித்துரைக்கின்றவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளை திருப்தி செய்கின்ற ஆட்கள், பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை அளிப்பதற்கு, தகவுடையவரா வார்கள் என்பதை பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தலும்;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த அல்லது கணிசமானளவு ஒத்த இலங்கை அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விமான்களை பரிமாற்றுதல் என்ற வகையாக அல்லது வேறுவகையாகக் கூட்டிணைத்தலும்;

(ஊ) சித்தியடைந்த பரீட்சைகள் மற்றும் படிப்புக் காலப்பகுதி அல்லது அனுமதியை நாடுகின்ற ஆட்களால் அல்லது பல்கலைக்கழகங்களில் நிறுவகத்தின் மாணவர்களால் பின்பற்றப்பட்ட கற்கையையும் துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பரீட்சைகள் மற்றும் படிப்புக் காலப்பகுதிகள் அல்லது நிறுவகத்தில் கற்கை அல்லது அதன் அத்தகைய பகுதிக்கு சமமானதாக வுள்ள பல்கலைக்கழக மட்டத்திலான படிக்கின்ற இடங்களையும் ஏற்றங்கீகரித்தலும் அத்தகைய ஏற்றங்கீகாரத்தை எச்சந்தர்ப்பத்திலும் மீளப்பெறுதலும்;

(எ) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் நிறுவகத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படுத்துகின்றவாறான வேறு பதவிகளின் உருவாக்கம், ஒழித்தல் அல்லது இடைநிறுத்தலை பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தலும்;

(ஏ) போதனைகள், பயிற்சி அல்லது ஆராய்ச்சி நோக்கங்களுக்காகவாயினும்சரி, நிறுவகத்தின் நோக்கத்திற்காக நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும், வேறு கட்டிடங்களையும் நிறுவுதலும், சாதனமிடுதலும் பேணுதலும்;

(ஐ) பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன் தகைமைப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்களை வழங்குதலும்;

(ஒ) பல்கலைக்கழகம் மற்றும் நிறுவகத்திற்கு வெளியே உள்ள இடங்களில் ஆராய்ச்சி மற்றும் கற்கைநெறிகள் அல்லது கற்கைநெறிகளின் பாகங்களை நடாத்துவதற்கு, அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் துணைவிதிக்கு இணங்க ஒழுங்கேற்பாடுகளைச் செய்தலும்;

(ஓ) நிறுவகத்தின் பயிற்றுவிப்பவர்களாகவும் பரீட்சகர்களாகவும், நிறுவகத்தால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆட்களை பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் ஏற்று அங்கீகரித்தலும்;

(ஔ) கட்டணங்களை, அதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் விதிக்கு இணங்க கோருதலும் பெறுதலும்; அத்துடன்

(க) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதற்கென மேற்கூறப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் இடைநேர் விளைவானதாயினும்சரி, விளைவாந்தன்மையினவாயினும் சரி, அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தலும்.

5. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவனவர்களாகவிருத்தல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர்; அத்துடன்

(ஆ) இப்பந்தியின் நோக்கத்திற்காக எந்தப் பதவியை வகிப்பவர் அலுவலர் ஒருவராக உள்ளாரோ அந்தப் பதவியொன்றாக உள்ளதென கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

6. (1) முதற் பணிப்பாளர் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அடுத்துப்பின்னரான பணிப்பாளர் ஒவ்வொருவரும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்றாட்களைக் கொண்டவொரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும். உயர் கல்விசார் நிறுவனமொன்றின் அல்லது உயர் கல்விசார் நிறுவகமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவர் பணிப்பாளராக நியமிக்கப் படுமிடத்து, அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவகம் அவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் அத்தகைய உறுப்பினரை பணிப்பாளர் பதவியை ஏற்பதற்கு விடுவித்தல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், ஆட்கள் எவரும், இரண்டுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான காலங்களுக்கு நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது.

(3) பணிப்பாளரொருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அல்லது (4) ஆம் உட்பந்தி யின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர், தனது ஓய்வுபெறும் வயதைப் பூர்த்தி செய்யும் வரை, இவற்றுள் எந்நிகழ்வு முன்னதாக இடம்பெறுகிறதோ அதுவரை, பதவி வகித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளரொருவர், சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின் மேல் அந்நோக்கத்திற்காக கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் ஆணைக்குழுவின் தவிசாளரினால் நீக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விசேட கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய விசேட கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு பணிப்பாளர் தவிர்ந்த, அவர்களினுள் இருந்து ஆள் ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்ட அல்லது தனது பதவிக்காலத்தை பூர்த்தி செய்த பணிப்பாளர் ஒருவர், பணிப்பாளராக தனது நியமனத்திற்கு நேர்முன்னர் உயர்கல்விசார் நிறுவனம் ஒன்றின் அல்லது உயர்கல்விசார் நிறுவகமொன்றின் பணியாட்டொகுதியினரின் உறுப்பினர் ஒருவராக இருந்தால், அத்தகைய உயர் கல்விசார் நிறுவனத்தில் அல்லது உயர்கல்விசார் நிறுவகத்தில் அவரது நிலையான பதவிக்கு திரும்பிச் செல்லலாம். ஆயின், அவர் இளைப்பாற்று வயதை அடைந்திருத்தலாகாது.

(6) பணிப்பாளர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறு காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், பணிப்பாளரின் பதவியின் கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்காகத் தகுதியானவையென அது கருதக்கூடியவாறாக அத்தகைய

ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகப் பதிவாளர், பதவியின் வழக்கமுறையான கடமைகளைக் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(7) பணிப்பாளரின் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்படுமிடத்து, ஆணைக்குழு, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், நிரந்தரமான நியமனமொன்று ஆக்கப்படும்வரை பணிப்பாளரின் பதவியின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கு பொருத்தமானதென அது கருதக்கூடிய வாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும் வரை, பல்கலைக்கழகப் பதிவாளர், பதவியின் வழக்க முறையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

7. (1) பணிப்பாளர், நிறுவகத்தின் பிரதான நிறைவேற்றலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர், சபையின் பதவிவழி உறுப்பினராகவும் ஒவ்வொரு கற்கைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். அவர், நிறுவகத்தின் வேறு ஏதேனும் அதிகாரசபை அல்லது குழுவின் ஏதேனும் கூட்டத்தைக் கூட்டுவதற்கும், அதில் சமுகமாயிருப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராகவிருந்தாலொழிய, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவரா தலாகாது.

(2) சபையினால் மற்றும் ஒவ்வொரு கற்கைச்சபையினாலும் அதற்கென பணிப்பாளருக்கு காலத்துக்குக்காலம் சட்டமுறையாக வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, கட்டளைச் சட்டத்தினதும், சட்டத்தினதும் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள் அவை நிறுவகத்துடன் தொடர்புபட்ட அளவுவரை உரியமுறையில் கடைப்பிடிக்கப்படுகின்றது என்றும் சபை மற்றும் ஒவ்வொரு கற்கைச் சபையின் தீர்மானங்களுக்கு பயன் கொடுக்கப்படுகின்றது என்றும் உறுதிப்படுத்துவது அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன் அந்நோக்கத்திற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

(3) சபையினதும் மற்றும் கற்கை சபை ஒவ்வொன்றினதும் முடிபுகளுக்கு பயன்கொடுப்பது அல்லது பயன்கொடுக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் நிறுவகத்தின் கணக்கு அலுவலராதல் வேண்டும்.

(5) பணிப்பார், நிறுவகத்தினுள் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

8. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவற்றைப் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(அ) சபை;

(ஆ) கற்கைச் சபை;

(இ) விசேடித்த துறைச் சபைகள்; அத்துடன்

(ஈ) அத்தகைய அதிகாரசபைகளாக இருப்பதற்கு கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

9. சபையானது நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் ஆட்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது:-

(அ) பணிப்பாளர்;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரின் நியமத்தர் ஒருவர்;

(இ) சுதேச மருத்துவம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரின் நியமத்தர் ஒருவர்;

(ஈ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரின் நியமத்தர் ஒருவர்;

(உ) ஆயுர்வேத ஆணையாளர்;

(ஊ) நிறுவகத்தின் உடன் முன்னிருந்த பணிப்பாளர்;

(எ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு சுதேச மருத்துவ நிறுவகம் மற்றும் சட்டத்தின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளர்கள்;

(ஏ) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்தா அலகுகளின் தலைவர்கள்;

(ஐ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர்.

(2) பின்வரும் வேறு உறுப்பினர்கள், அதாவது:-

(அ) ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து ஆயுர்வேத ஆணையாளரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயுர் வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேட நிபுணர் தர மருத்துவர்களுள் இருந்துமான ஒவ்வொரு உறுப்பினர்;

(ஆ) சட்டம், நிருவாகம் மற்றும் நிதித் துறைகளில் சிறப்புப் பெற்றுள்ள ஆட்களிடையே இருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்;

(இ) அத்தகைய பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே இருந்து பல்கலைக்கழக பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

10\. (1) சபையின் தவிசாளராகவும், சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்கும் பணிப்பாளராக விருத்தல் வேண்டும். தவிசாளர், கூட்டமொன்றிற்கு தலைமைதாங்க முடியாதவிடத்து, உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு சமுகமளித்த எவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலே ஒழிய, விடயத்திற்கேற்ப அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அவரது நியமனத் திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட, மூன்றாண்டு காலம் ஒன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து நீக்கப்பட்டாலே ஒழிய மீள தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவரது காலம் முடிவுறுவதற்கு முன்னர் தனது பதவியை வறிதாக்கினால், அவரது அடுத்துறுநர், தனது பதவியை முன்னரே வறிதாக்கினலே ஒழிய, அவரது முன்னுறுநரின் பதவிக்காலத்தின் முடிவுறாத பாகத்திற்கு பதவிவகித்தல் வேண்டும்.

ஆயின், மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் எந்த அந்தஸ்து அல்லது உறுப்பாண்மையின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையவராகவிருந்தாரோ அந்த அந்தஸ்து அல்லது உறுப்பாண்மையை வைத்திருக்கும் காலம் வரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) எவரேனும் சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டு அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம்.

(4) எவரேனும் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர், ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்டு அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம்.

(5) வராமைக்கான அனுமதியின்றி சபையின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறிய சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர், சபையின் உறுப்பினர் ஒருவராக தனது பதவியை வறிதாக்கிவிட்டார் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவானது, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான ஆளொருவரை நியமித்தலும் வேண்டும்.

(6) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான, கலந்தாலோசனையுடன், அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படிகள் சபையின் உறுப்பினர்களுக்கு செலுத்தப் படுதல் வேண்டும்.

(7) சபையின் ஏதேனும் கூட்டமொன்றின் கூட்ட நடப்பெண், அதனது மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒரு பங்காகவிருத்தல் வேண்டும்.

(8) சபையானது அவசியமேற்படும் போதெல்லாம் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஒவ்வொரு வருடத்தில் எட்டு நிகழ்வுகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(9) பணிப்பாளர், அவர் அவசியமென கருதும் போதெல்லாம் அல்லது ஒரு வாரத்தினுள் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாதவர்களிடமிருந்து அவரால் பெறப்பட்ட எழுத்திலான கோரிக்கை ஒன்றின் மேல் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

11. (1) சட்டம் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபையானது தத்துவங் களை பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் இக்கட்டளைச் சட்டத்தினால் நிறுவகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிகளைப் புரிதலும் நிறை வேற்றுதலும் வேண்டும்.

(2) சட்டம் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபையானது, நிறுவகத்தில் போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகளின் கட்டுப்பாடு மற்றும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையானது, உட்பந்தி (1) மற்றும் (2) இனால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கு பங்கமின்றி, பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(அ) நிறுவகத்தின் ஆதனம் மற்றும் நிதிகளை வைத்திருத்தலும் கட்டுப்படுத்துதலும் நிருவகித்தலும்;

(ஆ) சட்டம் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகம் சம்பந்தமான எல்லா கருமங்களையும் ஒழுங்குபடுத்துதலும் தீர்மானித்தலும்;

(இ) நிறுவகத்தின் பொதுவான நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கும் வேறு எவையேனும் குறித்த நோக்கங்களுக்காகவும் அதற்கு கிடைக்கக்கூடியதாக ஆக்கப்பட்ட எவையேனும் நிதிகளை நிருவகித்தலும்;

(ஈ) நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட விருப்பாவணக் கொடைகள், நன்கொடைகள் மற்றும் அசை வுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் இரண்டினதும் மானியக் கொடைகளை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுதலும் ஏற்றுக்கொள்ளலும்;

(உ) நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை மதிப்பீடு செய்தலும் அத்தகைய அறிக்கை மற்றும் கணக்குகளை பல்கலைக்கழகம் மற்றும் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பித்தலும்;

(ஊ) நிறுவகத்தின் நிதிசார் மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளை பல்கலைக் கழகம் மற்றும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தலும்;

(எ) ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகள் போன்ற விசேடித்த துறைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின்

சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள், பின்பற்றப்படவேண்டிய கற்கைநெறிகள் மற்றும் பயிற்சி, சித்தியடையவேண்டிய பரீட்சைகள் மற்றும் அத்தகைய பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளுக்கு தகைமை பெற விரும்பும் மாணவர்களால் திருப்திப்படுத்தப்படவேண்டிய வேறு நிபந்தனை களையும் இயைபான கற்கைச்சபையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தலும்;

(ஏ) பரீட்சார்த்தியின் விசேட தகைமை தொடர்பிலான சபையின் சான்றுப்படுத்துகைகளைப் பெறுவதிலான நடவடிக்கை முறையை சம்பந்தப்பட்ட கற்கைச் சபையுடனான கலந்தாலோசனை யுடன் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தலும்;

(ஐ) எந்த விடயம் தொடர்பில் துணைவிதிகள் அல்லது விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அந்த ஏதேனும் விடயம் தொடர்பில் துணைவிதிகள் அல்லது விதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளை சட்டமாக்குவதற்காக மூதவைக்கும் பேரவைக்கும் சமர்ப்பித்தலும்;

ஆயின், எவ்வாறாயினும், கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகளுடன் தொடர்பான துணைவிதி ஏதும், சம்பந்தப்பட்ட கற்கைச் சபையிடமிருந்தான அறிக்கைகளைக் கவனத்திற்கொண்டதன் பின்னர் தவிர வரையப்படுதலாகாது;

(ஒ) நிறுவகத்தின் பணியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்களையும், வளவு களையும், தளபாடங்களையும், சாதனங்களையும், வேறு பொருட்களையும் வழங்குதலும்;

(ஓ) நிறுவகத்தின் பயிற்சியாளர்கள் மற்றும் பரீட்சகர்களாக ஏற்று அங்கீகரிப்பதற்கு பொருத்த மானவர்களாகவுள்ள அத்தகைய ஆட்களை, இயைபான கற்கைச் சபையுடனான கலந்தா லோசனையுடன் பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு விதந்துரைத்தலும்;

(ஔ) இயைபான கற்கைச் சபையிடமிருந்தான அறிக்கைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர் மற்றும் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன், பின்வருவனவற்றை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல்:-

(i) ஏலவேயுள்ள கற்கைச் சபைகளையும் விசேடித்ததுறைச் சபைகளையும் மீள ஒழுங்கு படுத்துதல் மற்றும் புதிய கற்கைச்சபைகளையும் விசேடித்ததுறைச் சபைகளையும் தாபித்தலுக்கான திட்டங்கள்; அத்துடன்

(ii) அந்தந்த கற்கைச் சபைகளுக்கு ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமை களின் விசேடித்த துறைகளைக் குறித்தளித்தல்.

(க) தகுதியானதென அது கருதக்கூடியவாறாக அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமித்தலும், அவர்களது குறிப்பீட்டு நியதிகளைக் குறித்துரைத்தலும்; அத்தகைய குழுக்களின் அறிக்கைகளை கவனத்திற்கொள்ளுதலும் திரிபுடனோ, திரிபின்றியோ அத்தகைய அறிக்கைகளை ஒன்றில் அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும்;

(ங) கற்கைநெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை இயைபான கற்கைச் சபையுடனான கலந்தாலோசனை மற்றும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் தீர்மானித்தலும்;

(ச) பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானமுட்பட, நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை, நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏதேனும் பிணையத்தில் முதலீடு செய்தலும், இலங்கையில் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் ஆணைக் குழுவின் அங்கீகாரத்துடன் அத்தகைய பணங்களை முதலீடு செய்தலும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துதலும் அல்லது உடனடிச் செலவினத்துக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களுள் ஏதேனும் பாகத்தை, ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்புக்களில் இடுதலும்; அத்துடன்

(ஐ) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது தோதான வேறு ஏதேனும் சாதனத்தில் ஏற்பாடு செய்யப் பட்டவாறான நிறுவகத்தின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது விளைவான தன்மையினவான நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களை பிரயோகித்தலும்.

(4) தோதான கற்கைச் சபைக்கு ஏதேனும் கல்விசார் கருமத்தின்மீதான அதன் அபிப்பிராயத்தைப் பதிவு செய்து சபைக்கு தெரிவிப்பதற்கான சந்தர்ப்பமொன்று முதலில் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அக்கருமம் தொடர்பான தீர்மானமெதுவும் சபையினால் நிறைவேற்றப்படுதலாகாது;

ஆயின், அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதுவும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி செயலாற்றப்படுதலாகாது.

இப்பந்தியில் "கல்விசார் கருமம்" என்பது, தோதான கற்கைச் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுப் பணிப்புக்கும் அமைந்ததாகவுள்ள ஏதேனும் கருமம் என்று பொருளாகும்.

12. சபையானது, பின்வரும் மருத்துவ முறைகளின் ஒவ்வொன்றிற்கும் கற்கைச் சபைகளையும் இயைபான கற்கைச்சபைகளின் கீழ் விசேடித்த துறைச் சபைகளையும் தாபித்தல் வேண்டும்:-

(அ) ஆயுர்வேத மருத்துவம்;

(ஆ) சித்த மருத்துவம்; அத்துடன்

(இ) யூனானி மருத்துவம்.

13. (1) ஆயுர்வேத மருத்துவக் கற்கைச் சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினராகவிருக்கும் பணிப்பாளர்;

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளரினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில், சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் களினுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு சுதேச மருத்துவ நிறுவகத்தின் ஆயுர்வேதப் பிரிவிலிருந்தான இரு உறுப்பினர்கள்;

(இ) நிறுவகத்தின் பணிப்பாளரினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில், சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் களினுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கம்பஹா விக்ரமராச்சி ஆயுர்வேத நிறுவகத்திலிருந்தான இரு உறுப்பினர்கள்;

(ஈ) இயைபான கற்கைத்துறையின் விதப்புரையின் மேல் கீழே காணப்படும் ஒழுங்குவரிசைப்படி இயைபான நிறுவகத்தின் பணிப்பாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு சுதேச மருத்துவ நிறுவகத்தில் மற்றும் சட்டத்தின் கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கம்பஹா விக்ரமராச்சி ஆயுர்வேத நிறுவகத்திலுள்ள பின்வரும் ஒவ்வொரு கற்கைத்துறையிலிருந்தான சிரேஷ்ட பேராசிரியர் பேராசிரியர் இணைப் பேராசிரியர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் களில் ஒருவர்.

(i) காய சிகிச்சை;

(ii) சல்லிய சாலாக்கியம்;

(iii) பிரசூதி தந்திரம் கௌமாரபிரத்தியா;

(iv) தேசிய சிகிச்சை;

(v) சுவஸ்த சிகிச்சை;

(vi) திரவியகுணவித்யா;

(vii) சரீரவித்யா;

(viii) மூலிக சித்தாந்தம்.

(உ) ஆயுர்வேத ஆணையாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் பயிற்சி நிலையங்களின் விசேட நிபுணத்துவ தரத்திலிருந்தான ஒவ்வொரு ஆயுர்வேத விஷேட நிபுணர் ஒருவர்:-

(i) கொழும்பு ஆயுர்வேத போதனா வைத்தியசாலை;

(ii) கம்பஹா ஆயுர்வேத போதனா வைத்தியசாலை;

(iii) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம்.

(2) சித்த மருத்துவக் கற்கைச் சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினராகவிருக்கும் பணிப்பாளர்;

(ஆ) அலகின் தலைவரினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில், சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களினுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகிலிருந்தான இரு உறுப்பினர்கள்;

(இ) அலகின் தலைவரினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில், சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களினுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக, சித்த மருத்துவ அலகிலிருந்தான இரு உறுப்பினர்கள்;

(ஈ) இயைபான கற்கைத்துறையின் விதப்புரையின் மேல் கீழே காணப்படும் ஒழுங்குவரிசைப்படி அலகின் தலைவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையின் சித்த மருத்துவ அலகில் உள்ள பின்வரும் ஒவ்வொரு துறையிலிருந்தான சிரேஷ்ட பேராசிரியர் பேராசிரியர் இணைப் பேராசிரியர் அல்லது, சிரேஷ்ட விரிவுரையாளர் களிள் ஒருவர்.

(i) நோய் நாடல் சிகிச்சை;

(ii) விரண சிகிச்சை;

(iii) குழந்தை மருத்துவமும் மகளிர் மருத்துவமும்;

(iv) குணபாடம்;

(v) மூல தத்துவம்;

அத்துடன்

(உ) ஆயுர்வேத ஆணையாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் பயிற்சி நிலையங்களின் விசேட நிபுணர் தரத்திலிருந்தான ஒவ்வொரு சித்த விஷேட நிபுணர் தர வைத்தியர் ஒருவர்;

(i) யாழ்ப்பாணம் கைத்தடி சித்த போதனா வைத்தியசாலை;

(ii) திருகோணமலை சித்த போதனா வைத்தியசாலை;

(iii) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம்.

(3) யூனானி மருத்துவக் கற்கைச் சபையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினராகவிருக்கும் பணிப்பாளர்;

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளரினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில், சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களினுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பு சுதேச மருத்துவ நிறுவகத்தின் யூனானி அலகிலிருந்தான இரு உறுப்பினர்கள்;

(இ) இயைபான கற்கைத்துறையின் விதப்புரையின் மேல் கீழே காணப்படும் ஒழுங்குவரிசைப்படி நிறுவகத்தின் பணிப்பாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, கொழும்பு சுதேச மருத்துவ நிருவகத்திலுள்ள பின்வரும் ஒவ்வொரு துறையிலிருந்தான சிரேஷ்ட பேராசிரியர் பேராசிரியர் இணைப் பேராசிரியர் அல்லது, சிரேஷ்ட விரிவுரையாளர் களில் ஒருவர்.

(i) முஅல்லிஜாத்;

(ii) இல்ழுல் ஜராகத்;

(iii) அம்ராஸ் -எ-நிஸ்வான்-வோ-கபாலாத் - வோ அத்பால்;

(iv) தேசிய இலாஜ்;

(v) தனஸ்புசி -வோ-சமஜ்ஜே-திப்;

(vi) இல்முல் அத்வியா;

(vii) குல்லியாத்.

(ஈ) ஆயுர்வேத ஆணையாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் பயிற்சி நிலையங்களின் விசேட நிபுணர் தரத்திலிருந்தான ஒவ்வொரு யூனானி விஷேட நிபுணர் ஒருவர்;

(i) கொழும்பு ஆயுர்வேத போதனா வைத்தியசாலை;

(ii) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம்.

(4) கற்கைச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்:

(அ) கற்கைச் சபையொன்றில் கல்விசார்துறையொன்றின் நியமத்தர்கள், நிறுவகத்தின் பயிற்சியாளர் ஒருவராகவிருப்பதற்கு விதிக்கப்பட்டதும் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டதுமான தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துகின்ற கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களுடனான கலந்தாலோசனையுடன், முறையான பணிப்பாளர்கள், பட்டமுன் நிறுவகங்களின் தலைவர்கள் அல்லது அலகுகளினால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) சுதேச மருத்துவ அமைச்சின் பயிற்சி நிலையமொன்றிலிருந்தான நியமத்தவர்கள், வைத்தியசாலையின் பணிப்பாளரினால் அல்லது நிலையத்தின் தலைவரினால் தலைமை தாங்கப்பட்ட கூட்டமொன்றில் பயிற்சியாளர் ஒருவராகவிருப்பதற்கு விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளை திருப்திப்படுத்துகின்ற விசேட நிபுணர்தர வைத்தியர்களினுள் இருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய பெயர்கள், ஆயுர்வேத ஆணையாளரினால் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் கற்கைச் சபை, குறித்துரைக்கப்பட்ட நோக்கமொன்றிற்காக, ஓராண்டு காலப்பகுதியொன்றிற்கு ஆகக்கூடியது மூன்று ஆட்களை முகாமைச்சபையின் ஒருப்பாட்டுடன் கூட்டுச் சேர்க்கலாம். அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட ஆள் எவரும் அத்தகைய கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலில் நிற்பதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(6) (அ) கற்கைச் சபையின் எவரேனும் உறுப்பினரொருவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டு காலமொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் மீள தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராகவிருத்தலும் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவரது பதவிக்காலம் முடிவுறும் முன்னர் தனது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்;.

ஆயின் மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும், எந்த அந்தஸ்து அல்லது உறுப்பாண்மையின் பயனைக்கொண்டு கற்கைச் சபையின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராகவிருந்தாரோ அந்த அந்தஸ்து அல்லது உறுப்பாண்மையை வைத்திருக்கும் காலம்வரை பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், வைத்தியசாலை, நிறுவகம், பல்கலைக்கழகம் அல்லது கற்கைத்துறையிலிருந்தான பதவிவிலகல், ஓய்வுபெறுதல் அல்லது இடமாற்றத்தின்மேல் உறுப்பினரொருவராக இல்லாதொழிதலும் வேண்டும்.

(ஆ) கற்கைச் சபையின் எவரேனும் உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்டு அவரது கைப்பட்ட எழுத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம்.

(இ) வராமைக்கான அனுமதியின்றி கற்கைச் சபையொன்றின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தவறிய அக்கற்கைச் சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் கற்கைச் சபையின் உறுப்பினர் ஒருவராக தனது பதவியை வறிதாக்கிவிட்டார் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளரானவர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான ஆளொருவரை நியமிப்பதற்கான அத்தகைய நடவடிக்கையை எடுத்தலும் வேண்டும்.

(ஈ) ஏதேனும் செல்லுபடியான காரணத்தின் விளைவாக கற்கைச்சபை ஒன்றிற்கு அல்லது விசேடித்த துறைச் சபையொன்றிற்கு பெயர்குறிக்கப்பட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்களை நியமிப்பதற்கு முடியாத சந்தர்ப்பங்களில், சபையானது இயைபான கற்கைச் சபையுடன் அல்லது விசேடித்த துறைச்சபையுடனான கலந்தாலோசனையுடன் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமைபெற்ற ஆட்களை நியமிப்பதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) சபையானது, சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டுக்குக் குறையாதவர்களால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மேல், கற்கைச் சபை ஒன்றை கலைப்பதற்கு அல்லது கற்கைச்சபை யொன்றின் உறுப்பினரொருவரை நீக்குவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) (அ) கற்கைச் சபை ஒவ்வொன்றும் தவிசாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் கற்கைச் சபையின் உறுப்பினர்களினுள் இருந்து அக்கற்கைச்சபையின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தவிசாளரின் பதவிக்காலம் கற்கைச்சபையின் பதவிக்காலமாகவிருத்தல் வேண்டும்.

(8) (அ) கற்கைச் சபை ஒவ்வொன்றும் செயலாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர், தோதான கற்கைச் சபையின் விதப்புரையின் மேல் சபையினால் நியமிக்கப்பட்ட கற்கைச்சபையின் உறுப்பின ரொருவராகவிருத்தல் வேண்டும்.

(ஆ) செயலாளரின் பதவிக்காலம், கற்கைச் சபையின் பதவிக் காலமாகவிருத்தல் வேண்டும்.

(9) உட்பந்தி (1), (2) மற்றும் (3) இன்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஏதேனும் கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டமொன்றின் கூட்ட நடப்பெண், கூட்டுச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் நீங்கலாக உறுப்பாண்மையின் மூன்றில் ஒரு பங்காகவிருத்தல் வேண்டும்.

(10) கற்கைச்சபை ஒவ்வொன்றும் அவசியமேற்படும் போதெல்லாம், கூடுதல் வேண்டும், எவ்வாறாயினும் ஒவ்வொரு வருடத்தில் பத்து நிகழ்வுகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

14. (1) சட்டம் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, கற்கைச் சபை ஒவ்வொன்றும், சம்பந்தப்பட்ட ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறைகள் தொடர்பில் போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகளின் கட்டுப்பாடு மற்றும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கற்கைச் சபை ஒவ்வொன்றும், உட்பந்தி (1) இனால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்கு பங்கமின்றி, சம்பந்தப்பட்ட ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்ததுறைகளில் பின்வரும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றலும் வேண்டும்:-

(அ) சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தை கவனத்திற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல்;

(ஆ) இயைபான விசேடித்த துறையில், கற்கைநெறிகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் பற்றி விதந்துரைகள் மற்றும் அறிக்கை ஒன்றை முன்வைத்தல்;

(இ) குழுக்களை நியமித்தலை விதந்துரைத்தல்; அவைகள், இயைபான விசேடித்த துறை தொடர்பான ஏதேனும் விசேட விடயம் அல்லது விடயங்களை கவனத்திற்கொள்ளுதல் மற்றும் அறிக்கையிடுதல் நோக்கத்துக்காக கற்கைச் சபையின் உறுப்பினர்கள் தவிர்ந்த ஆட்களை உள்ளடக்கலாம்;

(ஈ) கற்கைநெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை சபைக்கு விதந்துரைத்தல்;

(உ) இயைபான விசேடித்த துறையில் கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பாக ஒழுங்கு விதிகளை வரைதல்;

(ஊ) பயிற்சியாளர்கள் மற்றும் பரீட்சகர்களாக ஏற்று அங்கீகரிப்பதற்கு பொருத்தமானவர்களாகவுள்ள அத்தகைய ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல்;

(எ) இயைபான விசேடித்த துறையில் விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்துள்ள மற்றும் விதித்துரைக்கப்பட்ட வேறு நிபந்தனைகளை திருப்திசெய்துள்ள அத்தகைய ஆட்கள், அவ்விசேடித்த துறையில் பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகளை அளிப்பதற்கு தகவுடையவராவார்கள் என்பதை சபைக்கு விதந் துரைத்தல்;

(ஏ) தகைமைப் பரிசில்கள் புலமைப் பரிசில்கள் பொருளுதவிகள், உநவிப்பணங்கள், கண்காட் சிகள் மற்றும் வேறு பரிசுகளுக்கானபோட்டியின் வகை மற்றும் நிபந்னைகளை சபைக்கு விதந்துரைத்தல்;

(ஐ) தகைமைப்பரிசில்கள், புலமைப் பரிசில்கள், பொருளுதவிகள், உநவிப்பணங்கள், கண்காட்கிகள் மற்றும் வேறு பரிசுகளை அளிப்பதற்கு பொருத்தமான ஆட்களின் பெயர்களை சபைக்கு விதந்துரைத்தல்;

(ஒ) பின்வருவனவற்றை சபைக்கு விதந்துரைத்தல்-

(i) ஏலவேயுள்ள கற்கைச்சபைகளை மீள ஒழுங்குபடுத்தல் மற்றும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டங்கள்; அத்துடன்

(ii) அந்தந்த கற்கைச் சபைகளுக்கு மருத்துவ விசேடித்த துறைகளைக் குறித்தளித்தல்.

(3) சபையானது, இயைபான கற்கைச்சபையின் அங்கீகாரத்துடன், விசேடித்த துறைகள் தொடர்பில் விசேடித்த துறைச் சபைகளைத் தாபித்தல் வேண்டும் என்பதுடன் -

(அ) விசேடித்த துறைச் சபை ஒவ்வொன்றும், ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமை களின் விசேடித்த துறைகள் தொடர்பில் சபையினால் தாபிக்கப்பட்ட இயைபான கற்கைச் சபையொன்றின் பொது பணிப்புகளின்கீழ் பணியாற்றல் வேண்டும்;

(ஆ) எந்த விசேடித்த துறையில் இயைபான கற்கைச் சபை ஒன்றின் பொதுப்பணிப்பின்கீழ் போதனை, கல்வி, பயிற்சி மற்றும் மதிப்பீடு நிறைவேற்றப்படுகின்றதோ அந்த விசேடித்த துறையொன்று தொடர்பில் விசேடித்த துறைச்சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய விசேடித்த துறைச்சபை பின்வரும் பத்து உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) பணிப்பாளர்;

(ii) இயைபான கற்கைச்சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டியதும் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதுமான ஆறு உறுப்பினர்கள்; அவர்களில் குறைந்தது மூன்று

உறுப்பினர்கள் இயைபான விசேடித்த துறையில் விசேடநிபுணர் தர வைத்தியர்களிலிருந்தான விசேட நிபுணர்களாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட எவையேனும் பட்டமுன் நிறுவகங்கள், ஆயுர்வேத, சித்த அல்லது யூனானி மருத்துவ முறைமைகள் அலகுகள் அல்லது சுதேச மருத்துவ அமைச்சின் பயிற்சி நிலையங்களில் இருக்கின்ற அல்லது தொழில் புரிந்தவர்களுள் இருந்து பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்;

(iii) இயைபான விசேடித்த துறையில் உள்ள விசேட நிபுணர்களினுள் இருந்து சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்;

(இ) விசேடித்த துறைச் சபை ஒவ்வொன்றும், விசேடித்த துறைச் சபையின் உறுப்பினர்களினால் அதன் உறுப்பினர்களினுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தவிசாளர் ஒருவரையும் செயலாளரையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதவிக்காலமானது விசேடித்த துறைச் சபையின் பதவிக்காலமாகவிருத்தல் வேண்டும்;

(ஈ) விசேடித்த துறைச் சபையொன்றின் ஏதேனும் கூட்டமொன்றின் கூட்ட நடப்பெண், கூட்டுச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் நீங்கலாக, மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் ஒரு பங்காகவிருத்தல் வேண்டும்;

(உ) விசேடித்த துறைச் சபையொன்றின் பதவிக்காலமானது, கற்கைச் சபையின் பதவிக்காலம் முடிவுறும் தேதியன்று முடிவுறுதல் வேண்டும்;

(ஊ) விசேடித்த துறைச் சபை ஒவ்வொன்றும், ஒவ்வொரு வருடமும் ஆகக்குறைந்தது ஆறு கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்;

(எ) விசேடித்த துறைச்சபை ஒவ்வொன்றும், குறித்த நோக்கம் ஒன்றிற்காகவும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்காகவும் விசேட நிபுணர்களை கூட்டுச்சேர்ப்பதற்காக விதந்துரைக்கலாம் என்பதுடன் அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட ஆள் எவரும் விசேடித்த துறைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தேர்தலில் நிற்பதற்கோ அல்லது வாக்களிப்பதற்கோ உரிமை கொண்டிருத்தலாகாது;

(ஏ) சம்பந்தப்பட்ட இயைபான கற்கைச்சபையொன்றின் உறுப்பினர் ஒருவராகவில்லாத விசேடித்த துறைச் சபையொன்றின் உறுப்பினரொருவர், இயைபான கற்கைச்சபையின் கூட்டம் ஒன்றில் விசேடித்த துறைச்சபை தொடர்பான கருமங்களை முன்வைப்பதற்கு குறித்தளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில், அத்தகைய நியமத்தர், அக்குறித்த முன்வைப்புக்காக உரியமுறையில் கூட்டுச் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய முன்வைப்பு பூர்த்தி செய்யப்படுவதன்மேல் கூட்டுச்சேர்க்கப்பட்ட உறுப்பினரொருவராக இல்லாதொழிதலும் வேண்டும்;

(ஐ) சபை, சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டுக்கு குறையாதவர்களால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மேல் விசேடித்த துறைச் சபையொன்றை கலைப்பதற்கு அல்லது விசேடித்த துறைச்சபையொன்றின் உறுப்பினர் ஒருவரை நீக்குவதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சட்டம், கட்டளைச் சட்டம் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கும் கற்கைச் சபையின் பொதுப் பணிப்புகள் மற்றும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, விசேடித்த துறைச் சபை ஒவ்வொன்றும் பின்வரும் பணிகளை புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:-

(அ) விசேடித்த துறையுடன் தொடர்பான கற்கை நெறிகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், பாடத்திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் பற்றி இயைபான கற்கைச்சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கையையும் சமர்ப்பித்தலும்;

(ஆ) இயைபான போது உபகுழுக்களின் நியமனத்தை விதந்துரைத்தலும்; அக்குழுக்கள், விசேடித்த துறையுடன் தொடர்புபட்ட விசேட விடயம் ஏதேனும் ஒன்று இருப்பின் அதனை கருத்திற் கொள்ளும் மற்றும் அறிக்கையிடும் நோக்கத்திற்கான விசேடித்த துறைச்சபையின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கலாம்;

(இ) கற்றைநெறிகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு பயிற்சியாளர்களை அனுமதித்தலுக்கான தேவைப்பாடுகளை கற்கைச் சபைக்கு விதந்துரைத்தலும்;

(ஈ) கற்றைநெறிகள் மற்றும் பரீட்சைகளுடன் தொடர்பான வரைவு ஒழுங்குவிதிகளை கற்கைச் சபைக்கு சமர்ப்பித்தலும்;

(உ) பயிற்றுவிப்பவர்கள் மற்றும் பரீட்சகர்களாக ஏற்றங்கீகரிப்பதற்கு பொருத்தமாகவுள்ள அத்தகைய ஆட்களை அத்தகைய பணிகளை ஆளும் பொது விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இசைந் தொழுக, கற்கைச்சபைக்கு விதந்துரைத்தலும்; அத்துடன்

(ஊ) சம்பந்தப்பட்ட கற்கைச்சபையினால் அல்லது சபையினால் விசேடித்த துறைச்சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் கருமங்களை அறிக்கையிடுதலும்.

15. நிறுவகத்தின் நிதியாண்டானது அரசாங்கத்தின் நிதியாண்டைப் போன்ற அதே நிதியாண்டாகவிருத்தல் வேண்டும்.

16. (1) நிறுவாகமானது, (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவக நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; பின்வருவன அதனுள் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஆ) அறக்கொடைகளிலிருந்தான வருமானம்;

(இ) நிறுவகத்தின் உதவிக்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதும், ஆணைக்குழுவினால் மானியக்கொடைகளாக செலுத்தீடு செய்யப்பட்டதுமான பணம்;

(ஈ) எத்தகையதுமான மூலத்திலிருந்தேனும் பெறப்பட்ட நிறுவகத்துக்கு சொந்தமான ஏனைய எல்லாப் பணங்கள்.

(2) தோதான அரசிறைத் தலைப்புக்களின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டதும் குறிப்பிட்ட ஒரு மாதத்தின் போது நிதியத்திற்கு செலுத்தப்பட்டதுமான எல்லாப் பணத் தொகைகளின் சுருக்கம் ஒன்று, அடுத்துவரும் மாதத்தின் முடிவுக்குமுன்னர் அதன் தகவலுக்காக ஆணைக்குழுவுக்கு பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

17. (1) பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-

(அ) நிறுவகத்தின் கணக்குகளை, கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல்;

(ஆ) நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களைப் பெறுதலும் முறையான கணக்குத் தலைப்பு களுக்கு அத்தகைய பணங்களை வரவு வைத்தலும்;

(இ) எல்லா அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளையும் செய்தல்;

(ஈ) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டிற்கான வருடாந்த நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்காக தயாரித்தல்;

ஆயின், எவ்வாறாயினும், குறித்த நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட மானியக்கொடைகளிலிருந்து அல்லது குறித்த குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம், நிறுவனத்தின் கணக்குகளில் தனிவேறாக கணக்குக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன்,

கொடுப்பனவெதுவும், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக் கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கத்திற்காக அல்லது குறிக்கோளுக்காக முறையாக அளிக்கப்பட்டதோ அந்த நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அல்லாத வேறு ஏதேனும் நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து செலுத்தப் படுதலுமாகாது.

18. (1) நிறுவகமானது ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விபரங்களை உள்ளடக்கியும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக, கணக்குகள் பற்றிய வருடாந்தக் கூற்று மற்றும் புள்ளிவிபரங்களைத் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குகள் பற்றிய புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் இருத்தல் வேண்டும்.

19. உயர்கல்விசார் நிறுவனம் ஒன்றின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு இயைபானவாறு சட்டத்தின் பாகம் XIII இன் அத்தகைய ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

20. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, பல்கலைக்கழகத்தின் ஒருப்பாடு மற்றும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் வினைத்திறனான பிரயோகம், புரிதல் மற்றும் நிறைவேற்றுகைக்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர், விடயத்திற்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் சொந்த பணியாட் டொகுதியினுள் இருந்து அதனால் விடுவித்ததன்மேல் வழங்கப்படுதல் வேண்டும் அல்லது ஆணைக்குழுவினால் அல்லது பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிப்பதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர் ஒருவரின் அல்லது வேறு ஊழியரின் சேவைகள், முழு நேர அடிப்படையில் நிறுவகத்துக்கு வழங்கப்படுகின்றவிடத்து, நிறுவகமானது, பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவிக்கான சம்பளம் மற்றும் படிகளையும் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில், நிறுவகமானது, பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனை மற்றும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகளை சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது வேறு ஊழியருக்கு செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பணிப்பாளரின் பணிப்புகள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

21. எவரேனும் ஆள் உரிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது கூட்டுச் சேர்க்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி அல்லது எவரேனும் ஆள் நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபை அல்லது வேறு குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு உரித்துடைய வராகவுள்ளாரா என்பது பற்றி எவையேனும் கேள்விகள் எழுந்தால், எழுப்பப்பட்ட கேள்வியைத் தீர்ப்பதற்கு சபையானது முடியாதுள்ள பட்சத்தில் அத்தகைய கேள்வி ஆணைகுழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அதன்மீது ஆணைக்குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

22. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபை அல்லது வேறு குழுவின் சட்டம், தீர்மானம் அல்லது வழக்கு நடவடிக்கை ஏதும், வெறுமனே அதன் உறுப்பினர்களினுள் வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருக்கின்ற காரணத்துக்காகவோ அல்லது அத்தகைய உறுப்பினரை நியமிப்பதில் எவையேனும் குறைபாடுகள் காரணமாகவோ செல்லுபடியற்றதாதல் ஆகாது.

23. இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறைகளில் பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை வழங்குவதற்கும் அளிப்பதற்குமான தத்துவம் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு மட்டும் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும்:-

(1) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகம் அத்தகைய பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை நிறுவகத்தின் விதப்புரையின் மேல் மட்டும் வழங்குதலும் அளித்தலும் வேண்டும்.

(2) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக் கழகம், எவையேனும் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறைகள் தொடர்பில், 13 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவகத்தினால் கற்கைச்சபை தாபிக்கப்படவில்லையோ அந்த எவையேனும் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறைகளில், அத்தகைய பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புக்களை வழங்கலாம், அளிக்கலாம்.

(3) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் பல்கலைக் கழகம் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறை தொடர்பில் 13 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவகத்தினால் கற்கைச் சபையொன்று தாபிக்கப்பட்டிருந் தாயினும்சரி அல்லாவிடினும்சரி, அத்தகைய ஏதேனும் விசேடித்த துறையில் ஆராய்ச்சியின்மேல் முழுமையாக அல்லது பகுதியளவிலான அடிப்படையில் பட்டப்பின் பட்டங்களை வழங்கலாம் அளிக்கலாம்;

(4) ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறைகளில் கல்விசார் சிறப்புக்கள், நிறுவகம் மற்றும் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒழுங்கேற்பாடுடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும், உயர்தொழிற்சார் குழுக்களால் வழங்கப்படலாம்.

24. இக்கட்டளைச் சட்டத்தில்-

“சட்டம்” என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்;

“தோதான சாதனம்” என்பது, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச் சட்டம், நியதிச் சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப்பொருள்படும்;

“ஆணைக்குழு” என்பது, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப்பொருள்படும்;

“பரீட்சகர்” என்பது, சபையின் சான்றுப்படுத்துகையின் அல்லது ஒத்த தகைமைகளின் பின்னர் ஐந்து வருட அனுபவத்தையுடையவராகவும் அல்லது சபைச் சான்றுப்படுத்துகையின் சிறப்புரிமைகளுக்கு தகவுடையவராகவும் ஏதேனும் பல்கலைக்கழகத்தில் அல்லது சுதேச மருத்துவ அமைச்சில் முனைப்பான சேவையில் இருக்கவேண்டிய ஆளொருவர் எனப்பொருளாதல் வேண்டும்;

“உயர்தொழிற்சார் குழு” என்பது, ஒன்றில் பாராளுமன்ற சட்டம் ஒன்றினால் கூட்டிணைக்கப்பட்ட அல்லது சபையினால் அத்தகையதாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி மருத்துவ முறைமைகளின் விசேடித்த துறையின் கழகம், கல்லூரி அல்லது வேறு ஆட்கள்குழு எனப் பொருள்படும்;

“பயிற்றுவிப்பாளர்” என்பது, சபையின் சான்றுப்படுத்துகையின் அல்லது ஒத்த தகைமைகளின் பின்னர் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் அல்லது சபைச்சான்றுப்படுத்துகையின் சிறப்புரிமை களுக்கு தகவுடையவராகவும் ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது சுதேச மருத்துவ அமைச்சில் முனைப்பான சேவையில் இருக்கவேண்டிய ஆளொருவர் எனப் பொருளாதல் வேண்டும்.

“பயிற்சி நிலையம்” என்பது, கற்கைச் சபையொன்றின் ஏலவேயுள்ள ஏதேனும் உறுப்பாண்மைக்கு பங்கமின்றி நியாயமான அறிவித்தலுடன் சம்பந்தப்பட்ட கற்கைச் சபையின் விதிப்புரையின்மேல் சபை மற்றும் மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, விசேடித்த துறையொன்றில் போதனைகள் மற்றும் பயிற்சி அல்லது போதனைகள் அல்லது பயிற்சியை வழங்கும் வைத்தியசாலையொன்று, வாட்டு

அல்லது அலகு எனப் பொருளாதல் வேண்டும்.

“ஆயுர்வேத மருத்துவ விசேடித்ததுறை” என்பது, காய சிகிச்சை, சல்லிய சாலாக்கியம், ஸ்திரி ரோகா மற்றும் பிரசூதிதந்திரம், கௌமார பிருத்வியம், தேசிய சிகிச்சை, சுவஸ்த விருத்தம், அகதா தந்திரம், திரவிய குணவித்யா, பைசாட்ஜய கல்பனா மற்றும் ரச சாஸ்திரம், சரீர வித்யா மற்றும் மௌலிக சித்தாந்தம் அல்லது காலத்துக்குக்காலம் நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் விசேடித்த துறை எனப் பொருள்படும்;

“சித்த மருத்துவ விசேடித்த துறை” என்பது, சித்த மருத்துவம், அறுவை மருத்துவம், சிரோ ரோக மருத்துவம், பெண் நோயியல், மகப்பேற்று மருத்துவம், குழந்தை மருத்துவம், பரம்பரை மருத்துவம், சமூகநல மருத்துவம், நஞ்சியல், குணபடம், சித்த மருந்தியல் மற்றும் சித்த மூல தத்துவம் அல்லது காலத்துக்குக்காலம் நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மேல் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் விசேடித்த துறை எனப் பொருள்படும்;

“யூனானி மருத்துவ விசேடித்த துறை” என்பது, முநல்லிஜாத், இல்முல் ஜராஹத் அம்ராஸ் - ஏ - ஐன் அன்ப் உசுன் வோ - ஹலக், அம்ராஸ் - ஏ - நிஸ்வான் - வோ - கபாலத், இல்முல்அத்பால்,தேஷிய இலாஜ், தபூசி வோ - சமாஜ் - ஏ - திப் இல்முல் சுமூன் முபர்ரட் அத்வியா தவா சாசி வோ -குஸ்தாசாசி குஷ்டா சாசி, தஷ்ரீஹ - ஏ - பதன் - வோ - முனபே - உல் - ஆஸா, உம்ர் அல் தபய்யா மற்றும் விசேசதுறைகள் அல்லது காலத்துக்குக்காலம் நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் விசேடித்த துறை எனப் பொருள்படும்;

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.